15.புரட்டாதி. 2021 பக்கங்கள் - 04



பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182


# தினப்புயல்


THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06



கலையரசி நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.

T.P- 0770457661



மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 12


## எதிர்வரும் 21ஆம் திகதியுடன் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்படுமா?



இலங்கையில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டமானது எதிர்வரும் 21ஆம் திகதியுடன் தளர்த்தப்படவே வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. டெல்டாவினது வீரியம் நாடு முழுவதும் பரவியுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ள போதிலும், சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் தரவுகளின் படி நாளாந்த கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், நாளொன்றுக்குப் பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. எனினும், தொடர்ந்தும் நாட்டை முடக்கிவைத்திருக்க முடியாத நிலையும் இருக்கிறது. மக்களும் கொவிட் நிலைமை காரணமாக பொருளாதார ரீதியாக பாதிப்படைந்துள்ளனர்.


(03ஆம் பக்கம் பார்க்க...)


## 3000 பாடசாலைகளை மீண்டும் திறக்க முடியும்

200க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட கிராமப்புறங்களில் உள்ள சுமார் 3,000 பாடசாலைகளை ஆரம்பத்தில் மீண்டும் திறக்க முடியும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் குறித்த பாடசாலைகளை ஒரு முறையான திட்டத்தின் கீழ் திறக்க வேண்டும் என்றும் சுகாதார அமைச்சருக்கு வழங்கிய பரிந்துரையில் குறித்த சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. கொரோனா தடுப்பு செயலணியுடன் இணைந்த இந்தக் குழுவால் எட்டப்பட்ட பரிந்துரைகள் செப்டம்பர் 17 ஆம் திகதி ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன.


(03 ஆம் பக்கம் பார்க்க...)


## கொள்கையை மாற்றுங்கள் இல்லையேல் அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்குவார்கள்



இலங்கைக்கு எதிராக எந்தவொரு நாடும் யுத்தங்களை தொடுக்காத நிலையில் இந்த நாட்டில் தமிழர்களை எதிரியாக கருதியே பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளீர்கள். இந்த நாட்டின் பிரஜைகளையே நீங்கள் எதிரிகளாக நினைத்துள்ளீர்கள் என அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இராணுவ மயமாக்கலுக்குள் செல்லும் அரசாங்கம் தனது கொள்கையை மாற்றிக்கொள்ளவில்லை என்றால் ஒட்டுமொத்த மக்களும் அரசாங்கத்திற்கு எதிராக வீதிக்கு இறங்குவார்கள் எனவும்...


(03 ஆம் பக்கம் பார்க்க...)


## சகலவிதமான கிரிக்கெட் போட்டிகளிலும் இருந்து ஓய்வு பெறுவதாக இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் லசித் மாலிங்க அறிவிப்பு

லசித் மாலிங்கவின் உத்தியோகபூர்வ சமூக வலைத்தளங்களில் இந்த விடயத்தை அவர் பதிவிட்டுள்ளார். இந்த பதிவில் கிரிக்கெட்டுக்கு ஆதரவு வழங்கும் வகையில் எப்பொழுதும் உங்களுடன் நான் இருப்பேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


(03ஆம் பக்கம் பார்க்க...)

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,வவுனியா.

## ஐ.நாவும், இலங்கையின் செயற்பாடுகளும்

வழமைபோலவே ஐ.நா மனித உரிமை ஆணையாளரது முதல் நாள் அமர்வின் வாய்மூல அறிக்கை வெளியாகியுள்ளது. இலங்கையானது ஐ.நா மனித உரிமைகள் சபையினால் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக எந்தப் பிரேரணை வந்தாலும் இலங்கையைக் காப்பாற்றவே வல்லரசு நாடுகள் முனையும். இலங்கை அரசு அவர்களுக்குத் தேவை. தமிழர்கள் அல்ல.

ஐ.நா சபையால் இலங்கையை அடிபணிய வைக்க முடியாது. உறுப்பு நாடுகளால் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க இயலாது. அவர்களது பிரேரணைகளை இலங்கை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளவில்லை. நடைமுறைப்படுத்தவும் இல்லை. உலகத்தை ஏமாற்ற கண்துடைப்பு வேலைகளை செய்துவருகின்றனர் அவ்வளவுதான்.

இலங்கையரசின் செயற்பாடுகள். இலங்கையில் மனித உரிமை விடயங்களில் என்ன நடந்தது. தற்போது என்ன நடக்கிறது என்கிற விடயங்கள் அனைத்தும் ஐ.நாவுக்கு நன்கு தெரியும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குதல் அல்லது திருத்தங்களை மேற்கொள்ள இலங்கை ஒருபோதும் இடமளிக்காது. அதுபோல் தமிழர்களைக் கண்கானிப்பதையும். ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதையும். மனித உரிமைச் செயற்பாட்டாளர்களை துன்புறுத்துவதையும் ஒருபோதும் நிறுத்தாது. மாறி மாறி ஆட்சிக்குவரும் அரசுகளால் இச்செயற்பாடுகள் நடைபெற்ற வண்ணமே இருக்கிறது.

பலர் இன்று நாட்டைவிட்டுத் தப்பியோடிவிட்டனர். பலர் காணாமல் போய்விட்டனர். மிச்சமாக இருப்பவர்களையும் நாட்டைவிட்டு ஓடவைக்கவே அரசு முனைப்புடன் செயற்படுகிறது. இதேவேளை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் அவர்கள் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கைக்கு தம்மை நியாயப்படுத்தி அறிக்கை ஒன்றினை வெளியிட்டுமுள்ளார். இந்த அரசும் ஐ.நாவின் செயற்பாடுளை புறக்கணித்திருக்கிறது. தமிழர்களுக்குத் தீர்வு சர்வதேச நீதிமன்றம் தான்.

## இருபதுக்கு20 தென்னாபிரிக்கா வசம்



இலங்கை மற்றும் தென் ஆபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியுமான இருபது20 கிரிக்கெட் போட்டியில் தென் ஆபிரிக்க அணி 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியில். நாணய சுற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களை இழந்து 120 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இலங்கை வீரர்கள் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்க தவறியிருந்த நிலையில் குசல் ஜனித் பெரேரா 3 பவுண்டரிகள் அடங்கலாக அதிகபடியாக 39 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் தென் ஆபிரிக்க அணியின் காகிசோ ரபாடா 23 ஓட்டங்களை கொடுத்து 02 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இதற்கமைய.121 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்க அணி 14.4 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது.

அணி சார்பில் குயின்டன் டி கொக் 7 பவுண்டரிகள் அடங்களாக 59 ஓட்டங்களையும். ரீசா ஹென்ரிக்ஸ் 4 பவுண்டரிகள் 1 சிக்ஸர் அடங்களாக 56 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். இதற்கமைய தென் ஆபிரிக்க அணி 3 - 0 என்ற அடிப்படையில் இருபது20 தொடரை கைப்பற்றியது.

**நாட்டில் மேலும் 136 கொவிட் மரணங்கள் நேற்று (14.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 11,567 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 2475 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 490,957 ஆக அதிகரித்துள்ளது.**

## சுய தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு ஆயுர்வேத மருந்துப்பொதி அறிமுகம்

(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கமைய கொரோனா தொற்று நோயை மக்கள் மத்தியிலிருந்து ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் சுதேச மருத்துவ அபிவிருத்தி கிராமிய மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலைகள் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடியின் பணிப்புரைக்கமைய ஆயுர்வேத ஆணையாளர் வைத்தியர் தம்மிகவின் வழிகாட்டலின் அடிப்படையிலும் கொரோனா தொற்றுநோயை மக்கள் மத்தியிலிருந்து ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டு வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு ஆயுர்வேத மருந்துப்பொதி ஒன்றை அறிமுகம் செய்துள்ளோம் என நிந்தவூர் அரச ஆயுர்வேத ஆராய்ச்சி தொற்றா நோய் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் கே.எல். எம். நக்பர் ஊடகங்களுக்கு நேற்று தெரிவித்தார்.

அம்பாறை நிந்தவூர் அரச ஆயுர்வேத ஆராய்ச்சி தொற்றா நோய் வைத்தியசாலையில் கொரோனா தொற்றுநோயை கட்டுப்படுத்துவது தொடர்பில் விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் அங்கு கருத்தில் தெரிவித்ததாவது. நாங்கள் அறிமுகம் செய்துள்ள ஆயுர்வேத மருந்துப்பொதியில் ஐந்து நபர்களுக்கு ஒரு வாரத்திற்கு தேவையான சுவதாரணி. தாலிஸ சாதி தூள். சித்தராம வட்டி. தேசந்துங் கல்க. சுதர்சன தூள். ஆவி பிடிக்க உபயோகிக்கும் எண் ணெய். தொண்டையில் பூசும் எண்ணெய் என்பன அடங்கியுள்ளது. கொரோனாவில் இருந்து பாதுகாப்பு பெற மக்கள் காட்டுவிலங்குகள் பறவைகளின் தொடர்புகளை குறைத்து கொள்வதுடன் தற்போதைய கொரோனா காலகட்டத்தில் சுகாதார பழக்கவழக்கங்களை எந்த துறையினராக இருப்பினும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவதுடன் தடுப்பூசிகளை தவறாமல் பெற்றுக்கொள்வது அவசியம்.

அடிக்கடி தோடம்பழம் தேசிக்காய் போன்ற பானங்களை நாம் அருந்த வேண்டும்.அதிகமான இயற்கை உணவுகளை நாம் உண்ண வேண்டும்.8 தொடக்கம் 10 மணிவரை ஓய்வெடுக்க வேண்டும். அரிசிக்கஞ்சி போன்றவற்றை அடிக்கடி அருந்த வேண்டும். மாமிச உணவுகளை தவிர்ப்பது நல்லது. சூரிய ஒளியில் 1 மணித்தியாலம் கிடைக்க கூடிய வகையில் இருத்தல் வேண்டும். எமது வீடுகள் நாம் வசிக்கின்ற இடங்களை நன்கு காற்றோட்டம் உள்ள இடமாக மாற்றி கொள்ளல் வேண்டும். இவற்றை செய்வதன் ஊடாக டெல்டா மாத்திரமல்ல எந்த வைரஸ் திரிபுகள் எதிர்காலத்தில் உருவாகினாலும் அந்த நோயில் இருந்து நாம் எம்மை முழுமையாக பாதுகாத்து கொள்ள முடியும்.

தடுப்பூசி வழங்குதலானது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை தோற்றுவிக்கும் ஒரு செயற்பாடாகும். இதனால் ஆயுள்வேத மருந்து வகைகளை பாவிப்பதனாலும் எந்தவொரு பக்க விளைவுகளும் இந்த தடுப்பூசிகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு ஏற்படாது என நம்புகின்றேன். எனவே தான் மக்களிடம் தடுப்பூசிகளை முதலில் ஏற்றிக்கொண்டு பக்கபலமாக இந்த ஆயுள்வேத மருந்துகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இதனூடாக கொரோனா தொற்றிலிருந்து முழுமையான பாதுகாப்பினை பெற்றுக்கொள்ள முடியும். இயற்கையினால் தயாரிக்கப்படும் ஆயுர்வேத மருந்துகள் ஆபத்தை விளைவிக்க மாட்டாது. மேலும் இதன் போது ஆயுர்வேத வைத்திய முறைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டதுடன் ஆயுள்வேத பானத்தை அருந்தும் முறைகள் பற்றியும் தெளிவுபடுத்தப்பட்டது. அத்தோடு கொரோனா தொற்றுக்குள்ளாகி வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு குறித்த மருந்து பொதி தக்க பயனை தரும் என்றார்.

## 3000 பாடசாலைகளை...

12 தொடக்கம் 18 வரையான வயதுடைய மாணவர்களுக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரையின்படி பைசர் தடுப்பூசியை செலுத்த வேண்டும் என்ற பரிந்துரையும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் முன்வைக்கப்பட்டது. அதன்படி மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்காக ஒக்டோபர் மாதத்தில் இலங்கைக்கு பைசர் தடுப்பூசியின் 4 மில்லியன் டோஸ் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## விவசாயிகளின் வயிற்றில்...

எரிபொருள் விலை அதிகரிப்பிற்கு வலுசக்தி அமைச்சர் தனிப்பட்ட ரீதியில் பொறுப்புக்கூற வேண்டியவர் அல்ல, ஒட்டுமொத்த அரசாங்கமும் இதற்கு காரணமாகும். வலுசக்தி என்பது அபிவிருத்திக்கு மிக முக்கியமான ஒன்றா கும். இன்று நாடு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் அதற்கு இந்த சபையில் உள்ள சகலரும் பொறுப்புக்கூற வேண்டும். இதுவரை காலமாக முறையாக கொள்கைத்திட்டம் ஒன்று இல்லாது அரசாங்கங்கள் செயற்பட்டமையே இதற்கு காரணமாகும்.

நாட்டின் வரவு செலவு திட்டத்தில் தேசிய பாதுகாப்பிற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்புக்கு இவ்வளவு நிதி ஒதுக்கப்படுகின்றது என்றால் யார் உங்களின் எதிரிகள் என்பதை கூறுங்கள். இலங்கைக்கு எதிராக எந்தவொரு நாடும் யுத்தங்களை தொடரவில்லை. அப்படி இருந்தும் இந்த நாட்டில் ஒரு இனக்குழுவிற்கு எதிராகவே நீங்கள் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளீர்கள். இந்த நாட்டின் பிரஜைகளையே நீங்கள் எதிரிகளாக நினைத்துள்ளீர்கள். ஏனென்றால் அவர்களின் அடிப்படை உரிமைகளை வழங்கவோ அவர்களை அங்கீகரிக்கவோ நீங்கள் தயாராக இல்லை. இது தான் அவர்களுக்கு எதிராக யுத்தத்தை தொடுக்கவும், அவர்களை கொன்று குவிக்கவும் காரணமாக அமைந்துள்ளது. தமிழ் மக்களின் உரிமைகளுக்கு எதிராகவே அரசாங்கத்தின் பாதுகாப்புக் கொள்கை கையாளப்பட்டது. 32 ஆண்டுகளாக தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறை கையாளப்பட்டது.

அன்று தமிழர்கள் போன்று இன்று முஸ்லிம்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். ஏனென்றால் உங்களின் ஊழல்வாத அரசாங்கத்தை கொண்டுசெல்ல இவ்வாறான அடக்குமுறைகளை கையாண்டு வருகின்றீர்கள். இராணுவ ஆக்கிரமிப்புக்குள் நாடு தள்ளப்பட்டு வருகின்றது. சிங்கள மக்களை திருப்திப்படுத்தி அவர்கள் உங்களை காப்பற்றுவார்கள் என்ற காரணத்திற்காக சிறுபான்மை மக்களை அடக்குமுறைக்குள் உற்படுத்த நினைக்கின்றீர்கள். நீங்கள் எமது குரலுக்கு செவிமடுக்க மறுக்கின்றீர்கள்.

தமிழ் மக்கள் 73 ஆண்டுகளாக நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இன்று முஸ்லிம்களும் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இன்று ஒட்டுமொத்த நாடும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அரசாங்கம் தனது கொள்கையை மாற்றிக் கொண்டு பயணிக்கவில்லை என்றால் அரசாங்கத்திற்கு எதிராக வீதியில் இறங்குவர். ஒட்டுமொத்த அரசாங்கத்தையும் எதிர்த்து மக்கள் போராடும் நிலைமையே உருவாகும் என்றார்.

## சகலவிதமான கிரிக்கெட்...

7 வருடங்களாக இலங்கை கிரிக்கெட் அணியில் விளையாடிய அவர் முன்னதாக டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். பின்னர், இருபது20 ப்ரீமியர் லீக் போட்டிகளில் பல்வேறு அணிகளின் சார்பில் விளையாடியிருந்தார்.

இந்நிலையில், தற்போது சகல விதமான போட்டிகளிலும் இருந்து ஓய்வுபெற உள்ளதாக அவர் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார். மேலும், W W W W W 0 இதுபோன்ற ஒரு ஓவரை இலங்கையர் ஒருவராலேயே வீச முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## எதிர்வரும் 21ஆம் திகதியுடன்...

இதேவேளை நாட்டில் தற்போது அமுலாகியுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் மேலும் நீடிக்கப்படுவதற்கான சாத்தியம் இல்லை என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். கடந்த 4 வாரங்களாக நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையும் மரணங்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது. அடுத்த வாரம் முதல் நாட்டை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் திறந்து பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தடுப்பூசி வழங்கல் மற்றும் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய அந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இன்று மக்கள் தமது உணவுத்தேவைக்காக வீதிகளில் பெருமளவில் நடமாடுவதைக் காணமுடிகிறது. அரசினை எதிர்பார்க்க முடியாது என்பது மக்களுக்குத் தெரியும். தடுப்பூசி இரண்டாம் செலுத்துகை நடவடிக்கைகளும் மாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில். விரைவில் நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் மக்களாகிய நாம் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். ஊசிகளைப் பெற்றுக்கொண்டோம் என அசமந்தப்போக்கில் செயற்படமுடியாது. தொடர்ந்தும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றவேண்டும். இலங்கை இன்னமும் அபாய வலயமாகவே உள்ளது என்பது நினைவில் இருக்கட்டும்.

## அதிகாரமிக்க அமைச்சராக இருந்து குறுகிய காலத்தில் முஸ்லிம்களுக்கு அநியாயம் செய்த ஒரு அமைச்சர் அலி சப்ரியே!



(மாளிகைக்காடு நிருபர்)

அன்று கொலைகாரர்களுக்காகவும். போதைப் பொருள் வியாபாரிகளுக்காகவும். பாதாள உலக தலைவர்களுக்காகவும் வாதிட்டு ஹராம் ஹலால் பாராது வருமானத்தை ஈட்டி வந்த அலி சப்ரி கடந்த ஒரு வருடமாக முஸ்லிம் அமைச்சர் ஒருவர் அமைச்சரவையில் இருக்கிறார் என்ற பெயரை உலகத்திற்கு காட்டிக் கொண்டு இலங்கை முஸ்லிம்களுக்கு செய்த அநியாயங்கள் ஏராளம் என முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பின் தலைவர் மௌலவி ஐ.எம். முகம்மட் மிப்லால் குற்றம்சாட்டியுள்ளார்.

சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் இஸ்லாமிய இயக்கங்களை பொய்க் குற்றச்சாட்டின் பெயரில் தடை செய்தது. அமைச்சர் அலி சப்ரி தனக்கு விருப்பமில்லை என்பதற்காக புர்கா மற்றும் நிகாபை தடை செய்தது. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பல அப்பாவிகளுக்கு எதிராக பொய்யான குற்றப்பத்திரிகை சமர்ப்பித்து அவர்களை பயங்கரவாதிகளாக்கியது. முஸ்லிம் தனியார் சட்டத்தை குர்ஆன். ஹதீசுக்கு முரணாக மறுசீரமைப்புக்கு சிபாரிசு செய்தது. 16 வயதிற்கு உட்பட்டவர்கள் மதரஸாக்களுக்கு அனுமதிக்கக் கூடாது என்ற சட்டத்தை அமைச்சரவையில் முன்மொழிந்தது என பல்வேறு செயற்பாடுகளை முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக அவர் செய்துள்ளார்.

அத்துடன் தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லாவுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ அமைச்சர் பதவி அளிப்பதாக வாக்குறுதி அளித்திருந்த நிலையில் அதனை அவருக்கு கொடுக்காமல் ஜனாதிபதி ஊடாக தடை செய்ததும் அலி சப்ரியே. அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றம் சென்றது மற்றும் அமைச்சர் ஆனது முஸ்லிம்களது வாக்குகளால் அல்ல. ஆனால் முஸ்லிம்களுக்கு அவருடாக நன்மைகள். நலவுகள் எதுவும் நடக்கும் என்பதை நாம் எதிர்பார்க்கவும் இல்லை அவர் அவ்வாறு செய்யவும் மாட்டார். ஆனால் தயவு செய்து முஸ்லிம்களுக்கு எதிரான. இஸ்லாத்திற்கு எதிரான சட்ட திட்டங்களை அமுல்படுத்துவதையும் அதற்கு ஆதரவளிப்பதையும் உடனடியாக நிறுத்திக் கொள்ளுங்கள். மேலும் இன்னும் பல சதிகளுடனும். திட்டங்களுடனும் இஸ்லாத்திற்கு எதிரான ஐரோப்பிய நிறுவனங்களின் யூரோவிற்கும். டொலருக்கும் அடிமையாகி இதுபோன்ற அநியாயங்களை செய்து கொண்டிருக்கும் அலி சப்ரியை நாங்கள் அல்லாஹ்விடமே பொறுப்பு சாட்டுகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

# மூன்றாவது டோஸ் தடுப்பு மருந்து தேவையில்லை

உலகம் முழுவதும் கொரோனாவின் இரண்டாவது மற்றும் மூன்றாவது அலை பல்வேறு நாடுகளில் பரவிவருகிறது. கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் தற்போது வைரஸ் தாக்கம் குறித்த அச்சம் குறைந்துள்ளது. இதற்கு முக்கியக் காரணம் துரிதமான தடுப்பு மருந்து விநியோகம்தான். இரண்டு டோஸ் தடுப்பு மருந்துகளுடன் மூன்றாவதாக பூஸ்டர் டோஸ் செலுத்துவது பாதுகாப்பானது என்று உலக விஞ்ஞானிகள் பலர் கருத்து தெரிவித்து வருகின்றனர். ஆனால் இதற்கு மாற்று கருத்தும் அவ்வப்போது எழுவதை மறுக்க முடியாது.

தற்போது ஒரு ஆய்வில் மூன்றாவது டோஸ் தடுப்பு மருந்து தேவை இல்லை என்று தெரியவந்துள்ளது. லான்செட் இதழில் இந்த ஆய்வு முடிவு வெளியிடப்பட்டுள்ளது. உலக சுகாதார அமைப்பு தலைவர் டெட்ராஸ் அதனோம் கெப்ரயேஸஸ் முன்னதாக மூன்றாவது பூஸ்டர் டோஸ் தடுப்பு மருந்தை இந்த ஆண்டு இறுதி வரை எந்த நாடும் தங்கள் குடிமக்களுக்கு செலுத்த வேண்டாம் என்று கோரிக்கை வைத்தார். உலகின் பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடுகளுக்கு குறைந்தபட்சம் 10 சதவீத தடுப்புமருந்து கிடைத்ததும் மூன்றாவது டோஸ் குறித்து ஆலோசிக்கலாம் என்று அவர் கருத்து தெரிவித்திருந்தார். இதனை வழிமொழியும் வகையில் தற்போது பிரான்ஸ் விஞ்ஞானிகளும் தங்கள் ஆய்வின் மூலமாக கருத்து ஒன்றை கூறியுள்ளனர். கொரோனா பல்வேறு மாதிரியாக உருமாறும் நிலையில் மூன்றாவது டோஸ் செலுத்துவதால் பயனில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

# படம் பார்த்தால் 1 இலட்சம் வரை பரிசு

அமெரிக்காவில் பிரபலமான 13 திகில் படங்களை பார்ப்பவர்களுக்கு 1 லட்சம் ரூபாய் வரை கொடுக்கப்படும் என பிரபல நிறுவனம் ஒன்று வித்தியாசமான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அமெரிக்காவின் பினான்ஸ்பஸ் என்ற நிறுவனம் திகில் படங்கள் பார்க்கும் போட்டி ஒன்றை நடத்துகிறது. அந்த போட்டியின்படி, ஒரு நபர் உலகின் தலைசிறந்த 13 திகில் படங்களை பார்க்கவேண்டும். இந்த படங்களை பார்க்கும்போது ஃபிட்பிட் உதவியுடன் அவர்களின் இதய ஓட்டம் கணக்கிடப்படும். அவர்கள் எந்த படங்களை, எந்த காட்சிகளை பார்க்கும் போது பயப்படுகிறார்கள் என்று இந்த ஃபிட்பிட் மூலம் கணக்கிடப்படும்.

இந்த 13 படங்களை 10 நாட்களுக்குள் அவர்கள் பார்க்க வேண்டும். படம் பார்க்கும் எல்லோருக்கும் இந்த பரிசு தொகை வழங்கப்படும். இதில் படம் பார்க்கும் நபர்களின் இதய துடிப்பை மிகவும் நெருக்கமாக கண்காணிக்க உள்ளனர். இந்த 13 படங்களை பார்க்கும் நபர்களை வைத்து அந்த நிறுவனம் முக்கியமான கணக்கெடுப்பு ஒன்றை நடத்துகிறது. இதனால் படம் பார்க்கும் எல்லோருக்கும் கிட்டத்தட்ட 1 லட்சம் ரூபாய் வழங்க அந்த நிறுவனம் முடிவு செய்துள்ளது. பினான்ஸ்பஸ் நிறுவனம் மிகப்பெரிய பைனான்ஸ் நிறுவனம் ஆகும். ஹொலிவுட்டில் படங்களுக்கு தயாரிப்பு உதவிகளை செய்து வருகிறது. ஒரு திகில் படம் பார்த்தால் மக்கள் எப்படி எதிர்வினையாற்றுகிறார்கள் என்று ஆய்வு செய்ய இந்த போட்டியை அறிவித்துள்ளனர்.

இதற்கான 13 படங்களின் லிஸ்டையும் அந்த நிறுவனம் வெளியிட்டு உள்ளது. அதன்படி சா (Saw), அமிட்டிவில்லே ஹொரர் (Amityville Horror), ஏ க்வோயட் பிளேஸ் (A Quiet Place), ஏ க்வோயட் பிளேஸ் 2 (A Quiet Place Part 2), கேண்டிமேன் (Candyman), இன்சிடியஸ் (Insidious), தி பிளேயர் விட்ச் புரொஜெக்ட் (The Blair Witch Project.), சினிஸ்டர் (Sinister), கெட் அவுட் (Get Out), தி பர்ஜ் (The Purge), ஹாலவீன் 2018 (Halloween 2018), பரனோர்மல் அக்டிவிட்டி (Paranormal Activity), அனபெல் (Annabelle) ஆகிய படங்களை பார்க்கவேண்டும் என அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# குழந்தைகளுக்கான தடுப்பூசி விரைவில் அறிவிப்பு




அமெரிக்காவில் 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான கொவிட் தடுப்பூசி அடுத்த மாத இறுதியில் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஒன்றரை ஆண்டுகளில் அமெரிக்காவில் கொரோனாவால் நான்கு கோடிக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர். 6.60 இலட்சம் பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் அமெரிக்காவில் கொரோனா இரண்டாவது அலை வேகமாக பரவி வருகிறது. இந்த முறை, கொரோனா பாதிப்பால் அதிக அளவிலான குழந்தைகள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். குழந்தைகளுக்கு கொரோனா அறிகுறி இல்லாத பாதிப்பு அதிகம் உள்ளது.

இந்நிலையில் அமெரிக்க உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு கழகத்தின் முன்னாள் ஆணையரும், 'பைசர்' நிறுவன இயக்குனர் குழு உறுப்பினருமான டொக்டர் ஸ்காட் கோட்லியப் கூறியதாவது, எங்கள் நிறுவனம் குழந்தைகளுக்கான கொரோனா தடுப்பூசியை தயாரித்து உள்ளது. இதற்கான சோதனை இறுதிக் கட்டத்தில் உள்ளது. ஒக்.,இறுதியில் இந்த தடுப்பூசிக்கு அரசு அங்கீகாரம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து தடுப்பூசி விற்பனை துவங்கும். குழந்தைகளுக்கான தடுப்பூசி என்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் சோதனை மேற்கொள்ளப்படுகிறது என அவர் கூறினார். இதேபோல மொடர்னா நிறுவனமும் குழந்தைகளுக்கான தடுப்பூசி தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனத்தின் தடுப்பூசிக்கும் விரைவில் அரசு ஒப்புதல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# துபாயில் 'வீடெக்ஸ்' சோலர் கண்காட்சி

55 நாடுகளின், 1,200 நிறுவனங்கள் பங்கேற்கும் 'வீடெக்ஸ்' சோலர் கண்காட்சி துபாயில் அடுத்த மாதம் (ஒக்டோபர்) 5ஆம் திகதி நடக்கிறது. 'வீடெக்ஸ்' சோலர் கண்காட்சி குறித்த அறிவிப்பு வெளியிடும் நிகழ்ச்சி துபாயில் நடந்தது. இதில் அந்த ஆணையத்தின் மேலாண்மை இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி சயீத் முகம்மது அல் தயார் கலந்து கொண்டு பேசினார். இந்த கண்காட்சி நடைபெற துபாய் எக்ஸ்போ 2020 கண்காட்சி வளாகத்தில் 29 ஆயிரத்து 200 சதுர மீட்டர் பரப்பளவில் அரங்கு ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. துபாயில் ஆண்டுதோறும் நடைபெறும் சூரிய ஒளி மாற்று எரிசக்தி விழிப்புணர்வு கண்காட்சி இதுவாகும்.

இந்த கண்காட்சியில் நடப்பு ஆண்டில் மொத்தம் 55 நாடுகள் பங்கேற்க உள்ளன. இந்த நாடுகளில் உள்ள 1,200 தொழில் நிறுவனங்கள் கலந்துகொண்டு அந்த நிறுவனங்கள் தயாரித்துள்ள சூரிய ஒளியில் இயங்கும் பொருட்கள் மற்றும் மாற்று எரிசக்திக்கான தொழில்நுட்பங்கள் பார்வைக்கு வைக்கப்பட உள்ளது. 3 நாட்கள் இதில் கூடுதலாக தேசிய அளவில் அமீரக பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் அரசுத் துறைகள் கலந்துகொள்கின்றன. கண்காட்சி அரங்கில் மின்சாரம் மற்றும் தண்ணீர் ஆணையம் சார்பில் தொடங்கப்பட்டுள்ள சூரிய ஒளி மின்சார திட்டங்களை விளக்கும் வகையில் மாதிரிகள் வைக்கப்பட உள்ளது.